# ஸ்வர ஸஞ்சாரம்

## சங்கீத நினைவு அலைகள்

எம்.எஸ். செளந்தரம்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர், 1996

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 30.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17.
Printed at : NOVENA OFFSET PRINTING CO. © 84 88 91 / 855 84

# பதிப்புரை

திருமதி எம்.எல் செளந்தரம் என்னும் 85 வயதான இப்புத்தக ஆசிரியரை உங்களுக்கு அறிமுகப் படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில், கர்நாடக சங்கீதத்தில் புகழ்பெற்று விளங்கிய திரு. 'நாமக்கல் சேஷய்யங்கார்' அவர்களின் வளர்ப்பு மகளாகிய இவர், தம் தந்தையிடத்தும், தந்தையின் குருவிடத்தும் இசை பயின்றதோடன்றி அரியக்குடி திரு. ராமானுஜ ஐயங்காரின் முதல் சிஷ்யையாகவும் பெருமை கொண்டவர். தந்தை நடத்திய சங்கீத உற்சவங்களில் பல இசை மேதைகளைக் கேட்டு, ரசித்து, பழகி, ஒரு அபூர்வ சூழ்நிலையின் ஆக்கபூர்வமான பாதிப்பைப் பெற்றவர். அந்தணக் குடும்பத்தில் 1911ல் பிறந்தும் அன்றையப் பெண்களுக்குக் கிட்டாத சில உரிமைகளை புதுமைப் பெண்ணாகப் புரட்சிகரமாக இவர் பெற்றார் என்றே கருதவேண்டும். இருப்பினும் இவர் குரு அரியக்குடியே, இவரைக் கச்சேரி செய்யவும் ரிகார்டு பதிவு செய்யவும் தடை போட்டதினால் கிடைத்த வாய்ப்புகளையும் அவர் கைவிட்டார். ஆனால் மிகச் சிறந்த ஆசிரியையாக விளங்கி வந்துள்ளார். குடும்பச் சூழ்நிலையால் பல்கலைக்கழக ஆசிரியை வேலையையும் ஏற்க முடியாத ஏமாற்றம் இவருக்கு உண்டு. ஆயினும் பெண்கள் உரிமை, சமத்துவம் என்று பேசும் இன்றைய சமுதாயமும்

வியக்கத்தக்க சில துணிவான காரியங்களைச் செய்து புரட்சி படைத்துள்ளார். உதாரணமாக:-

1. ஐயங்கார் வகுப்பைச் சேர்ந்த இவர் ஐயர் வகுப்பைச் சேர்ந்த **திரு. நாராயணன்** அவர்களை விரும்பி மணம் புரிந்து கொண்டார்.

2. கச்சேரிகளைப் பகிரங்கமாக குரு ஆணையை மீறி சபாக்களில் செய்ய முடியாமற் போனாலும் தன் தங்கை ஆண்டாளுடனும், தனியேயும் பல ரசிகப் பிரமுகர்கள் இல்லங்களில் பக்கவாத்தியம் இல்லாமல் பாடியுள்ளார்.

3. பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இசைத்துறையில் டிப்ளமா (Diploma) வாங்கியுள்ளார்.

4. பல மாணவ மாணவிகளை உருவாக்கியுள்ளார்.

இவருக்கு இதற்கெல்லாம் துணிவுபிறக்க இவரது ஒன்றுவிட்ட சகோதரி (காந்திகிராம ஸ்தாபகர்) Dr. சௌந்தரம் (ஸ்ரீமான் T.V.சுந்தரமையங்காரின் மகள்), மற்றும் அவர் மூலமாக சந்தித்த ஆன்மீக சமூக சேவகர்கள் அன்னிபெஸண்டு, ஜேம்ஸ் கஸின்ஸ் மற்றும் ஆத்மார்த்த அன்பர்களாக இருந்த தமது வளர்ப்புப் பெற்றோர்கள், திரு. R.S. குப்புசாமி ஐயங்கார் – ருக்மணி தம்பதியர் மற்றும் திருமதி ராஜம் ராமசுந்தரம் போன்றோராவர். இவரது கணவர் திரு. நாராயணனும் முற்போக்கு மனத்தோடு இவரை ஆங்கிலம் படிக்க வைத்து அடுக்களையில் அடைய விடாமல் சமூக விழிப்புணர்வோடு வாழ ஊக்குவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



85 வயதைத் தாண்டிவரும் அம்மையார் **சௌந்தரம்** அவர்களின் சங்கீத உலக நினைவலைகளைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிடுவதில் 'வானதி பதிப்பகம் மகிழ்ச்சி அடைகிறது. வருங்கால சந்ததியருக்கு, பல சங்கீத மேதைகளைப் பற்றியும், பத்ததிகள் மற்றும் கற்கும்முறை, குரு-சிஷ்ய உறவு, வித்வான்கள் பழகிய பாங்கு, கச்சேரி முறை, சமூக சூழலின் பாதிப்பு போன்ற பல முக்கிய விவரங்களை, மிக இயற்கையாகவும், எளிமையாகவும் கொடுத்துள்ளார்.

இவர் எழுத்தாளர் அல்லர். ஆகவே யதார்த்தமாகப் பல விஷயங்களைப் பேச்சுத் தமிழில் ஒளிவுமறைவின்றி படம் பிடித்துக் காட்டியுள்ளது சங்கீதப்பிரியர்களுக்கு சுவையூட்டுவதாக உள்ளது. இந்த நூற்றாண்டின் கர்நாடக சங்கீத சரித்திரத்திற்கு இந்தச் சிறிய நூல் ஓர் அரிய நூலாக விளங்குமென நம்புகிறேன்.

**வானதி திருநாவுக்கரசு**

## பொருளடக்கம்


பக்கம்

1. எனது வாழ்க்கைக் குறிப்பும் குடும்பத்தினரும் . . 7
2. குழந்தைப் பருவ நினைவலைகள் . . . . . . . . . . 18
3. திருமணத்திற்குப் பின் . . . . . . . . . . . . . . . 43
4. ஆதரித்த ரஸிக பிரமுகர்களும் என் சிஷ்யர்களும் 74
5. சங்கீதம், நடனம், நாடகம், ஹரிகதை, சினிமா (இவைகளில்) நான் கண்ட விற்பன்னர்கள் . . . . 92
6. "சங்கீதம் அன்றும் இன்றும்" . . . . . . . . . . . . . 111

INDEX . . . . . . . . . . . . . . . . . . . . . . . 118


# 1

# எனது வாழ்க்கைக் குறிப்பும் குடும்பத்தினரும்

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த நாங்குனேரியில் 1911ம் ஆண்டு ஐப்பசி மாதம் அவிட்ட நக்ஷத்திரத்தில் சேஷாத்திரி அய்யங்கார் (T.V.சுந்தர மய்யங்கார் அவர்களின் பெரியப்பா மகன்) அம்புஜம் தம்பதிகளுக்கு பெண்ணாகப் பிறந்தேன் நான்.

தந்தை நல்ல ஸங்கீத ஞானமுடையவர். அவருடைய தந்தையும் நன்றாகப் பாடுவார். வைஷ்ணவ குடும்பத்தைச் சேர்ந்திருந்தாலும் என் தந்தை ஒரு சிறந்த நடராஜ பக்தர். செண்பக நல்லூரில் உள்ள நடராஜர்-கோவிந்தராஜர் இரு ஸன்னிதிகளுமுள்ள கோயிலுக்கு இவர் தர்மகர்த்தாவாக இருந்தார். இவர் எப்போதும் 'நடராஜர் பத்து' பாடியவண்ணமாக இருப்பார். என் தாயார் மஹாகுணவதி. எனக்கு உடன் பிறந்தவர்கள் எட்டு பேர்கள். அதில் மூத்தவர் பெருந்தேவி. இவர் கணவர் திரு சேஷய்யங்கார். இவ்விருவருந்தான் என்னை வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையார். இப்புத்தகத்தில் தந்தை என்று இனி நான் குறிப்பிடுவது இவரைத்தான். இவர் திருக்குருங்குடியைச் சேர்ந்தவராயினும் நாமக்கல் நரஸிம்ம

ஐயங்காரின் பிரதம சீடரானதால், நாமக்கல் சேஷய்யங்கார் என்று தான் அழைக்கப் பெற்றார்.

என் வளர்ப்புத் தாய், தந்தையுடன் ராமநாதபுரம், கீழச்சேவல்பட்டி, கண்டர மாணிக்கம், கோயமுத்தூர் முதலிய ஊர்களில் வாழ்ந்துவிட்டு அவர்களுடன் சென்னை வந்துவிட்டேன். இவ்வாறு சென்றபோது சிறிய ஊர்களிலும் என் தந்தை சங்கீதபாடம் சொல்லிக்கொடுத்து மாதம் ரூ.100/- சம்பாதித்தார். அப்பணத்தில் நாங்கள் வசதியாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம். அக்காலத்தில் கர்னாடக ஸங்கீதத்திற்கு அத்துணை ஆதரவும், மதிப்பும் இருந்து வந்தது.

சென்னை வந்தபிறகு எனது ஒன்றுவிட்ட சகோதரியும், T.V. சுந்தரமய்யங்காரின் பெண்ணுமான சௌந்திரம் அவர்களின் சொற்படி நான் படித்துக் கொண்டே பாட்டு சொல்லி கொடுக்க ஆரம்பித்தேன். சுந்தரி என்று என் பெற்றோர்கள் இட்ட பெயரை சௌந்திரம் என்று மாற்றி வைத்தார். டாக்டர் சௌந்திரம் மூலமாகவே சமூக ஆன்மீக சேவகர்களான Mrs. ஜேம்ஸ் கஸின்ஸ், Mrs. ஜீன்ராஜ்தாஸ் (Mrs. Jeanraj Das) திருமதி அன்னி பெஸண்ட், ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல் போன்றோரின் தொடர்பினால் என் மனதிலும், அறிவிலும் ஒரு எழுச்சியை அனுபவிக்க முடிந்தது. சௌந்திரம் மூலமாகவே அறிமுகமான வக்கீல் சுந்தரமய்யர் (வீணை மேதை பாலசந்தரின் தந்தை) பல பிரமுகர்களை எனக்கு அறிமுகப்படுத்தி நான் இசைப் பாடத்தை பலருக்குப் பயில்விக்கும்படி



செய்தார். அக்காலத்தில் நல்லதொரு ஆசிரியை என்ற நற்பெயரையும் சிறு வயதிலேயே பெற்றேன்.

சென்னையில் ஸங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடுடைய மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த திரு. N.M.S. நாராயணனுக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. அதன்பின் ஸங்கீத சம்பந்தமாக என் கணவர் எனக்கு உறுதுணையாய் இருந்து ஆங்கிலக் கல்வி, இசை (Diploma) டிப்ளமா, டெக்னிகல் தேர்வு போன்ற பல்கலைத் தேர்வுகளில் வெற்றி காண வைத்தார்.

Good year கம்பெனியில் நல்ல உத்யோகத்தில் இருந்தார் என் கணவர். நாங்கள் தஞ்சை சென்று அங்கேயே நிரந்தர குடித்தனம் ஏற்படுத்திக் கொண்டோம். எங்களுக்கு மூன்று பெண்கள் பிறந்தனர். அதில் மூத்தவள் சியாமளா, பத்மினி, சுமதி இருவரும் இரட்டையர்கள், தஞ்சையில் ஸங்கீதத்தை ஆத்மார்த்த பொழுது போக்காகக் கொண்டு திருச்சி AIR-ல் பாடிக் கொண்டும், சில கச்சேரிகள் செய்து கொண்டும் ஸங்கீத போதனையில் ஈடுபட்டுக் கொண்டும் இருந்தேன்.

என் சிஷ்யை அனுராதா நல்ல பாடகி, அழகியும் கூட, என் ஆதரவில் என் வீட்டிலேயே இருந்து இசையைக் கற்று தேர்ந்தாள். என் குரு அரியக்குடிக்கு நான் கொடுத்த வாக்கின்படி சபாக்களில் கச்சேரி செய்யாமலும் சினிமாவில் நடிப்பு உள்பட எனக்கு வந்த பலவாய்ப்புகளைப் பயன்படுத்தாமலும் என் குடும்பத்தையே கவனித்து வந்தது என் கணவருக்கு ஏமாற்றத்தை அளித்தது போலும். இதெல்லாவற்றிற்கும் தயாராக இருந்த அனுராதாவை அழைத்துக் கொண்டு

என் கணவர் 1949ம் வருடம் எங்களை விட்டுச் சென்றுவிட்டார். அப்போது என் மகள் சியாமளா S.S.L.C.தான் முடித்திருந்தாள் பத்மினி, சுமதி இருவரும் 6வது வகுப்பில் இருந்தார்கள். 1955ல் என் கணவர் மீண்டும் எங்களுடன் சேர்ந்தார். 1959ல் திடீரென அனுராதாவும் சர்க்கரை வியாதியில் இறந்துவிட்டார்.

குடும்பத்தில் ஏற்பட்ட இம்மாறுதல் காரணமாக பொழுது போக்காக இருந்த ஸங்கீதம் ஒரு தொழிலாக மாறியது. அடிக்கடி திருச்சி, சென்னை போன்ற இடங் களுக்குச் சென்று ஸங்கீதம் கற்றுக் கொடுத்து வந்தேன். என் தந்தை "சேஷய்யங்காரைப் போல்" ஒரு சிறந்த போதகர், என்று என்னைப் புகழ்ந்தனர். என்னிடம் ஸங்கீதம் பயில்வதை பெரும்பேறாகவும், கௌரவ மாகவும் கருதியவர்களுக்கு மட்டும் சொல்லிக் கொடுத்து வந்தேன். என் பெண்கள் மூவரையும் நன்றாகப் படிக்க வைத்தேன்.

மூத்த பெண் சியாமளா இசைத்துறையில் B.A.B.T. படித்துவிட்டு அவளது பெரியம்மா சௌந்திரம் ராமச்சந்திரன் நடத்தி வந்த "காந்தி கிராமத்தில்" இசைத்துறை தலைமையையும் ''சாந்தி சேனா'' தலைமையும் ஏற்று சமூக சேவையும், இசை சேவையும் செய்து வந்தாள். கிராமிய இசைபற்றி ஆய்வு நூல் எழுதி சென்னை பல்கலைக்கழகத்தில் M.Litt ஆராய்ச்சி பட்டத்தையும் பெற்றாள். தமிழ் நாடு ஸங்கீத நாடக சங்கம் (இன்றைய இயலிசை நாடகமன்றம்) இவரை ஆராச்சியாளராக நியமித்தது. அங்கு E. கிருஷ்ணய்யர் காரியதரிசியாகவும். டைரக்டர் K. சுப்பிரமணியம் உபதலைவராகவும் இருந்தனர். பின்பு டெல்லி பல்கலைகழகத்தில் இசைப் பேராசிரியராக நியமனம் பெற்றாள். ஆனால் அதைத் தவிர்த்து டைரக்டர் K. சுப்ரமண்யதத்தின் மூத்த புதல்வரான ஸ்ரீ பாலகிருஷ்ணனுக்கு திருமணம் செய்து கொடுத்து மகிழ்ந்தோம்.



டைரக்டர் K. சுப்ரமணியம் அவர்களின் குடும்பம் ஒரு கலைக் குடும்பம். அவர் மனைவி மீனாட்சி சுப்ரமணியம் நூற்றுக்கணக்கில் கீர்த்தனங்கள் செய்துள்ளார். வீணையும் வாசிப்பார். அவர் மகள் நீலா நல்ல பாடகி. பத்மாவின் கலை ஆர்வம் பற்றி பலரும் அறிவர். இக்குடும்பத்தினர் நடத்தி வரும் "நிருத்யோதயா ஸ்தாபனத்தில் முக்கிய பங்கேற்று லக்ஷண லக்ஷ்ய காரியங்களில் தன் நாத்தனார் Dr. பத்மா சுப்ரமணியத்துடன் சியாமளா பாலகிருஷ்ணன் இணைந்து செயல்பட்டு வருகிறாள். பொருள் விளக்க (Documentary) திரைப்படங்கள் தயாரிக்கும் பாலகிருஷ்ணன், தன் தந்தை காலத்திற்கு பிறகு நிருத்யோதாவின் தலைவராக இருந்து வருகிறார். இவர்கள் மகன் என் பேரன் கண்ணனுக்கும் நல்ல ஸங்கீத ஞானம். இளம் வீணை வித்வானாகத் திகழ்கிறான். வீணைக் கச்சேரிகள் செய்வதோடு, மிருதங்கம் சுத்த மத்தளம் வாசிப்பான். தன் தந்தை படப்பிடிப்புக்கும், அத்தை நிகழ்ச்சிகளுக்கும் நிர்வாக உதவிகளும் செய்கிறான். எனது முதல் சிஷ்யளான ஓவியர், பாடகர், திரு. எஸ். ராஜத்தின் சிஷ்யையும், நடனத்திற்கு பத்துவைக் குருவாகக் கொண்டவருமான காயத்ரியை அவன் தன் மனைவியாகப் பெற்றான். இவள் ஸம்ஸ்க்ருதத்தில் M.Phil தேர்ச்சி பெற்றவள். இவர்கள் இருவருக்கும் சௌ மீனாக்ஷி என்னும் மகவு பிறந்துள்ளாள்.

என் இரட்டைப் பெண்களான பத்மினி, சுமதிக்கும் தஞ்சாவூர் சங்கரையரை பாட்டு சொல்லி வைக்க அமர்த்தினேன். இவர்கள் இருவரும் அதில் ஆர்வம் காட்டவில்லை. என் மூன்று பெண்களையும் தஞ்சாவூர் மிருதங்கம் உபேந்திரனின் தாயார் காமுக்கண்ணு அம்மாளிடம் நடனம் பயில ஏற்பாடு செய்தேன். இதுவும் சில காலமே. இரட்டையர்கள் மட்டும் பின்பு F.G. நடேசய்யர் பிள்ளை பாலுவிடம் நடனம் பயின்றார்கள். ஓரிரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். படிப்பு முடிந்து திருமணமானபின் சமூகப் பணிகளில் ஈடுபட்டார்கள்.

பத்மினி சிவசுப்ரமண்யம் சிறந்த தன்னலமற்ற சமூக சேவகியாகவும், ஏழை எளியவர் போற்ற பல பணிகள் செய்து வருகிறாள். அவள் இப்போது ஒரு தேவி உபாசகியுமாவாள். Dr. சுமதிராவ் உடல் நலத்துறையில் W.H.O. அங்கீகாரம் பெற்று Ph.D. போன்ற பல பட்டங்கள் பெற்று தமிழ் நாடு அரசாங்கத்திற்கு உழைத்து இப்பொழுது தனிப்பட்ட முறையில் பொது சேவை செய்து வருகிறாள். இவளுடைய முயற்சியில் தான் என் பெயரில் ஈஞ்சம்பாக்கத்தில் ஒரு சிறிய அரங்கமும் எழும்பிக் கொண்டிருக்கிறது.

பத்மினியின் கணவர் சிவசுப்ரமணியம் ஒரு சிறந்த பௌதிக விஞ்ஞானி. மனிதாபிமானம் மிக்க பண்பாளர். W.H.O. வேலைநிமித்தமாக (Zambia)வில் இருந்தபோது திடீரென்று இறைவனடி சேர்ந்து விட்டார். இவர்கள் மகள் கவிதா மணமாகி கனடாவில் வசிக்கிறாள். மனோகர் கவிதா தம்பதி



களுக்கு சிவரங்., வருண் என இரு பிள்ளைகள், சுமதியின் கணவர் சுப்ரமண்ய ராவ் பிரபல வக்கில். குறிப்பாக ஆலயத்துறை, சட்ட இயலில் நிபுணர். இவர்களுடைய பெண்கள் வித்யா, ரோகிணி இருவரும் மணமானவர்கள்.

வக்கில் படிப்பில் தேர்ந்துள்ள வித்யா தஞ்சைக் கலையான கைவண்ண ஓவியங்களை வரைந்து வருகிறாள். இவள் கணவர் ஸாகர் ஒரு வக்கில். இவர்கள் பிள்ளை பெயர் ஸித்தார்த். ரோகிணியும் உதயனும் சிட்னி (Sydney) Australiaவில் உள்ளனர். இவர்கள் பொறியியல் நிபுணர்கள். கொள்ளுப் பேரக் குழந்தைகள் அனைவரையும் கண்டுவிட்ட எனக்கு மிக சந்தோஷமே.

நான் புகுந்த வீட்டிலும் ஸங்கீதம் நிறைந்திருந்தது. என் கணவரின் சிற்றன்னை 'பூச்சியம்மா' ஒரு சிறந்த பாடகி, வீணை தனம்மாளிடம் பாடம் கற்றுக் கொண்டவர். எனது மறைந்த மைத்துனர் திரு. NM நாராயணன், அவர் சிறந்த பாடகர் மட்டுமல்லாமல் "இந்து" பத்திரிகைக்கு கலைவிமர்சகராக இருந்தார். தனது வீட்டிலேயே வெள்ளிக்கிழமைகளில் பல கச்சேரிகள் நடக்கும்படி செய்து அதில் பல பிரமுகர் களையும் வித்வான்களையும் கவர்ந்திருக்கிறார். எனது நாத்தனார் புவனேஸ்வரி நன்றாகப்பாடுவார். இவர் நடன மேதை பாலசரஸ்வதியின் நடனத்திற்கு நிறைய பாடியிருக்கிறார். மற்றொரு நாத்தனார் சுசீலாவும் நன்றாகப்பாடுவார்.

என் உடன் பிறந்த சகோதரி ஆண்டாள். இவளையும் என் வளர்ப்புத் தந்தையே வளர்த்து

விவாகம் செய்து கொடுத்து அவள் பிள்ளைகளில் ஒருவனான திரு. ராகவனை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார். அவர்கள் யாவரும் தற்போது என் தந்தை கட்டிய வீட்டில் வசித்து வருகிறார்கள். என் தங்கை வெகு நாட்கள் என் தந்தையுடனேயே இருந்ததால் நிறைய க்ஷேத்ரக்ஞர் பதமும், தமிழ்ப்பதங்களும், கீர்த்தனைகளும் கற்று (மியூஸிக் அகாடமி நடத்திய) க்ஷேத்ரக்ஞர் பதப் போட்டியில் பாடி, தங்கப் பதக்கம் பெற்றாள். AIR-ரில் மதறாஸ் திருச்சி இரண்டு நிலையங்களிலும், 1957 வரை பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய சாரீரம் ப்ருகா நிறைந்த ஸுஸ்வரமான சாரீரம். அக்காலத்தில் என் தந்தையைக் காண வரும் ஒவ்வொரு பெரிய வித்வான் களும் அவள் சாரீர வசதிகண்டு அவளை ஒரு கீர்த்தனையாவது பாடு என்று கேட்டு வியந்து ஆசிர்வதித்து போவார்கள். என் குரு அரியக்குடிக்கும் என் தங்கைக்கும் (சங்கதிகளை) ப்ருகாவுடன் பேச வைப்பதில் போட்டி ஏற்படும். என் தங்கையே வெற்றி பெறுவாள். அடிக்கடி அவள் சாரீரத்தை எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் சாரீரதத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவார். நானும் அவளும் சேர்ந்து சிறுவயதில் கச்சேரிகள் செய்துள்ளோம்.

அவளுடைய பெண், நான் என் மூத்த மகளாகக் கருதும் செம்பா சேஷாத்திரி. இவளுக்கும் என் தந்தையே விவாகம் செய்து வைத்தார். அவளும் 1960ல் அமெரிக்கா, கனடா சென்று, கடைசியில் கானடாவில் மாண்ட்ரியலில் நிரந்தரமாக வசிக்கத் தொடங்கி விட்டாள். வெகு நல்ல சாரீரமும் நல்ல சங்கீத ஞானமும் படைத்தவள். "தியாகராஜரின் பஞ்சரத்ன" கீர்த்தனைகளை பலருக்கும் சொல்லிக் கொடுத்து ஒவ்வொரு வருடமும் அவர் தினத்தை கனடாவில், (தியாகராஜ ஆராதனை நாட்களாக) கொண்டாடு வதற்கும் அவளே முக்கிய காரணம்.

இவளுடைய மகன் வாசு குற்றாலம் திரு விஸ்வநாதய்யரிடம் மிருதங்கம் கற்றவன். மகள் உஷா அடையாறு திரு லக்ஷ்மணனிடம் நாட்டியம் பயின்றவள். செம்பாவின் கணவர் என் தமையனின் பிள்ளை (சேஷாத்திரி) McGill University, Montreal Canada வில் Professor ஆக வெகுகாலமாகப் பணியாற்றுகிறார்.

இப்புத்தகத்தை எழுதியதும் எனக்கும் என் தங்கைக்கும் பொன்னாடை போர்த்தி ஸ்ரீசெம்மங்குடி சீனிவாஸய்யர் அவர்களும், ராஜம் அவர்களும் எங்களை கௌரவித்தனர். சஞ்சம்பாக்கத்தில் என் பெயரில் ஒரு அரங்கமும் கட்ட என் மகள் சுமதிராவ் ஏற்பாடு செய்துள்ளாள்.

இப்புத்தகம் வெளியிடப்போகும் சமயம் என் தங்கை ஆண்டாள் இறைவன் திருவடியை அடைந்து விட்டது மிகவும் வருந்தத்தக்க விஷயம். என் சங்கீத நினைவலைகளில் அவளுக்கு ஒரு பங்கு உண்டு என்பதை சந்தோஷத்துடன் அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

எனது மூத்தபெண் சியாமளாவுடன் தான் நான் கடைசி காலத்தைக் கழித்து கொண்டிருக்கிறேன். நான் அடிக்கடி இப்பழைய சம்பவங்களெல்லாம் அவளிடம் சொல்லுவேன். 20 ஆண்டுகளுக்கு முன் அவள் இரு பெரிய நோட்டு புத்தகங்களைக் கொடுத்து, "உன் நினைவலைகளை எல்லாம் இவற்றில் முடிந்தபோ

தெல்லாம் எழுதிவைத்துவிடு" என்று சொன்னாள். எனக்கும் முடிந்தவரை, அப்பொழுது எழுத முடிந்ததால், எழுதி வைத்தேன். நிறைய முன்னும் பின்னுமாயும், எழுதியதைத் திரும்பவும் எழுதியும், அது அமைந்துவிட்டது. அவ்விரு நோட்டுப் புத்தகங் களையும் பார்த்து ஓரளவு புத்தகவடிவிற்கு முதலில் Dr. பத்மா சுப்ரமணியம் (என் அருமை பத்து) தான் கொண்டு வந்தாள். கடைசியில் இது முழு புத்தகரூப மாக எழுத உதவியது என் அன்புமகள் திருமதி செம்பா சேஷாத்ரி. ஆகமொத்தம் நான் எழுதிய நினை வலைகளின் தொகுப்பு வெளிவர என் குழந்தைகளே காரணம்.

என் வாழ்க்கையில் கச்சேரிசெய்து சம்பாதித்ததை விடப் பாடம் பயில்வித்து இறையருளால் பொருள்மட்டுமன்றி மனநிறைவும் சம்பாதித்துள்ளேன். இதுவரை யாரிடமும் பொருள் உதவி கேட்காமல் சந்தோஷமாக தெய்வம் வைத்துள்ளது. என் கணவர் திரும்பி எங்களிடம் வந்த பிறகும் அவர் விருப்பம் போல சுகவாசியாகவே இருந்தார். அவர் உடல் நலத்தில் கஷ்டப்படாமல் கடைசி வரையிலும் என் கடமைகளைச் செய்து வந்தேன், அவர் காலமாகும் வரை. மிக சுத்தமான பழக்கத்துடன் இருந்த அவருக்குப் புற்றுநோயாக இருக்குமோ என்று சந்தேகித்து டாக்டர் சொன்ன மறுநாள் 1974 ஜூலை மாதம் மாரடைப்பில் காலமாகிவிட்டார். ஒருநாள் கூடக் கஷ்டப்படாமல் பகவான் திருவடி அடைந்தார். இதை ஒரு புண்ணிய பலமாக நினைத்து என் வாழ்க்கையிலும் அப்படியொரு நல்ல முடிவு சம்பவிக்க பகவானை



வேண்டுகிறேன். அவர் காலத்திற்குப்பின் என் பெண் சியாமளாவுடனேயே இருந்து வருகிறேன்.

இந்த 85 வருட வாழ்க்கையில் எனக்குக் கிட்டிய சங்கீதத்துறை அனுபவங்களை என் சிந்தனைத் திரையில் தோன்றும் படங்களாக முடிந்தவரை பின்னால் வரும் பக்கங்களில் தந்துள்ளேன். என் குடும்ப வாழ்க்கையை விட இந்த ஸங்கீத அனுபவங்கள் சுவையானவை, நிரந்தர அர்த்த முள்ளவை, பயனுள்ளவை. இவைகளைப் பெற எனக்கு இருந்த சூழ்நிலையைத்தான் என் வாழ்க்கைக் குறிப்பு என்றும், குடும்பத்தினர் என்றும் ஒரு பூர்வபீடிகையாக இதை இங்கு தந்துள்ளேன்.

**2**

# குழந்தைப் பருவ நினைவலைகள்

அந்த நாட்களை நான் மறக்கவே முடியாது. என் அக்காவுக்குக் குழந்தைகள் இல்லாததால் நானும் என் தங்கை ஆண்டாளும் அவளிடமே வளர்ந்தோம். இன்று ஓர் அளவு ஸங்கீதத்தைப் பற்றியும் பெரியவர்களைப் பற்றியும் எழுதக் காரணமே என் வளர்ப்புத் தந்தை நாமக்கல் சேஷய்யங்காரும் அவர் மனைவி (பெருந்தேவி) என் அக்காவும் தான். நான் சந்தித்து அவர்கள் முன்னால் பாட நேர்ந்த வித்வான்கள் அநேகம் பேர். இன்று அவர்கள் அனைவரும் மறைந்து விட்டார்கள்.

## நாமக்கல் நரசிம்மய்யங்கார்

எனக்கு 6 அல்லது 7 வயதிருக்கும். ஸ்ரீரங்கத்தில் பல்லவி ஸ்ரீ நாமக்கல் நரசிம்மய்யங்கார் அவர்களின் பிரதம சிஷ்யர் என் வளர்ப்புத் தந்தை ஸ்ரீ நாமக்கல் சேஷய்யங்கார் "தாத்தாவிடம் உனக்கு ஸங்கீதம் ஆரம்பிக்கப் போகிறேன். சமர்த்தாய் அவரை நான்கு தடவை ஸேவித்துவிட்டு எதிரில் உட்கார்ந்து அவர் சொல்வதைத் திரும்பச் சொல்லு" என்று என் தந்தையின் உத்தரவின் பேரில் உள்ளே சென்றேன்.

பெரிய கூடம், நடுவில் இரண்டு பெரிய தூண்கள். நான் என் தந்தை சொல்லியபடி ஸேவித்துவிட்டு மிகவும் கூச்சத்துடன் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன். அன்று ஏதோ விசேஷம் போலும், பல சிஷ்யர்கள் ஆண்கள் பெண்கள் புடைசூழ முதிர்ந்த வயோதிகத்துடன், தங்க நிற மேனியில் வடகலைத் திருமண்ணுடன் (12) திருமண் காப்புடன் நல்ல கம்பீரமான தோற்றத்துடன் உட்கார்ந்து கொண்டு ஸ்ருதியைச் சேர்த்து ஸா பா ஸா சொல்லு என்றார். இப்படியாக என் பால சிக்ஷை ஆரம்பமாயிற்று. அந்த நன்னாளை நினைத்து இன்றும் பூரித்துப் போகிறேன். அதன் பின் இதைத் தொடர முடியாமற் போய்விட்டது. என் வளர்ப்புத் தந்தை கோயமுத்தூர் சென்றுவிட்டார். அவர்களுடன் நாங்களும் போனோம்.

ஸ்ரீரங்கத்தில் இருந்த நாட்களில் தாத்தாவின் பாட்டை ரஸிக்கும் தன்மை எனக்கு இல்லை. பிற்காலத்தில் என் தந்தை நாங்கள் பள்ளியப்பன் தெருவிலிருக்கும்போது ஆரம்பித்த "ஸ்ரீராமநவமி" உத்ஸவத்திற்கும் இடம் போதாமல், பெரிய கூடம் அமைந்த வீடாக நம்பர் 355 தங்கசாலைத் தெருவில் தொண்டை மண்டலம் பள்ளிக்கு அருகிலுள்ள வீட்டிற்கு குடி மாறினோம். இடம் பெரியது. வித்வான்கள் வந்த வண்ணமாகவே இருப்பார்கள். 1922லிருந்து 1926 வரை என்று ஞாபகம். என் தகப்பனார் விமரிசையாக நடத்தி வந்த ஸ்ரீராமநவமி உத்ஸவத்தில், தாத்தாவின் கச்சேரி கேட்டு ரஸித்தேன் அவருடைய பிரதம சிஷ்யர் என் தகப்பனார் நாமக்கல் சேஷய்யங்கார். பிறகு சாத்தூர் கிருஷ்ணய்யங்கார்,

மதுரை பிரதர்ஸ் எனும் ஸ்ரீனிவாஸ அய்யங்கார், அவர் சகோதரர் ஸ்ரீரங்கமய்யங்கார், பிற்கால ஸங்கீத கலாநிதி. இவர்கள் இரட்டை தம்பூராபோட தாத்தா பாடிய கச்சேரி, பியாகடை வர்ணம், இந்தஸாலவுடன் ஆரம்பித்து கேதாரகௌளை ராகத்தில் பாடிய ராகம், தானம், பல்லவி, முதலியவை என் காதிலேயே நிலைத்துள்ளது. அவர் நாயகி ராகம் பாடினால் அதில் கீர்த்தனமும் பாடி த்ருகால ஸ்வரமும் பாடுவார். அப்படியிருக்கும் நாட்களில் தாத்தாவைப் பார்க்க காலஞ்சென்ற பெங்களூர் நாகரத்தினம்மாள், வடக்கத்திய ஸங்கீதவித்வானான அப்துல் கரீம்கான் முதலானவர்கள் வருவார்கள்.

தாத்தாவுடன் சங்கீத சர்ச்சையில் ஈடுபட இறங்குவார்கள். கரீம்கான் சுத்தஸாவேரியில் காலஹரண கீர்த்தனம் வேறுபாடி அவருடைய ராகத்தை compare செய்வார். எனக்கென்னவோ இவை களெல்லாம் மிகவும் பிடித்தமானதாக இருக்கும். ஆனால் என் அக்காவுக்கு இவைகள் அவ்வளவாகப் பிடிக்காது. அவர்கள் இருக்கும் இடத்தில் உனக்கென்ன வேலையென்று திட்டுவாள். அவள் வசையையும் பொருட்படுத்தாமல் வந்தவர்களுக்கு, காபி, தண்ணீர், வெற்றிலை பாக்கு வழங்கும் கைங்கர்யத்தில் ஈடுபட்டு அவர்கள் உணர்ச்சியோடு பாடும் விதத்தைக் கேட்டும், என் வாய்ப்பை ஆர்வத்துடன் பயன்படுத்திக் கொண்டேன். இம்மாதிரி கைங்கர்யம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது என்றால் எனது வளர்ப்புத் தந்தையால்தான். எங்களது குடும்பம் மிகவும் பெரியது. பழமையில் ஊறியது.



அவ்வித சந்தர்ப்பத்தில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு மிகவும் அபூர்வமானதும், ருசிகரமானதுமாகும்.

## மிருதங்கம் வெங்குட்டு ஐயர்

கோயமுத்தூர் இடையர் வீதியில் நாங்கள் குடியிருந்தோம். சென்னை திருவல்லிக்கேணியில் ப்ரசித்தமான ஹோட்டலுக்குச் சொந்தக்காரர் கிருஷ்ணய்யர். அவர்களுடைய அண்ணன் மிருதங்கம் வெங்குட்டு ஐயர். இவர் ஒரு காலத்தில் ஜலதரங்கம் மஹாவித்வான் சுப்பையருக்கு மிருதங்கம் வாசித்து வந்தார். அவர் காலமான போதும் வெங்குட்டு தாத்தா அந்த வீட்டில்தான் இருந்தார்.

அந்த வீட்டிலிருந்த ஒரு பெரிய பெட்டியில் ஸ்ருதி சுத்தமாக மூன்று ஸ்தாயியில் அமைந்த கிண்ணங்கள் வரிசையாக வைக்கப்பட்டு இருக்கும். இந்தப்பெட்டி ஒருகட்டில் அளவு இருக்கும். அதன் மேல் தான் வெங்குட்டு தாத்தா படுத்துக் கொள்வார். நான் அவரைச் சந்தித்த போதே அவருக்கு வயது 75க்கும் அதிகம் என்ற நினைவு. தாத்தா நல்ல ஸங்கீத ஞானமுள்ளவர். ஸதா ஜலதரங்கம் சுப்பய்யரின் புகழ் தான் பாடுவார். நல்ல யோகி. நிறைய தண்ணீர் குடிப்பார். பிற்காலத்தில் காவி வஸ்திரம் தரிக்க ஆரம்பித்தார். பல கீர்த்தனங்கள் பெயர் சொல்லி புகழ் பாடுவார். எனக்கு ஒன்றுமே புரியாது.

சுப்பையர் வாசித்த ஜலதரங்க கிண்ணங்களை கண்ணும் கருத்துமாகப் போற்றிய தாத்தா என்னை தர்மவீதியிலுள்ள பள்ளியில் சேர்த்துவிட்டு திடீரென்று ஒரு டஜன் கிண்ணத்தைக் கொடுத்து

இதில் சாதம் சாப்பிடு. உனக்கு ஸங்கீத ஞானம் உண்டாகும் என்றார். தாத்தா என் தந்தையை தன் பிள்ளையாகவும் என் அக்காவை மருமகளாகவும், என்னைப் பேத்தியாகவும் பாவித்து வந்தார். அக்காவை மருமகளாக கெடுபிடியாய் நடத்துவார். அக்காவும் அவரை மாமனாராகவே மதித்து அவருக்குக் கைங்கர்யம் செய்வாள்.

## திருவையாறு ஸ்ரீ சுப்ரமண்ய அய்யர்

வெங்குட்டு தாத்தாவின் வீட்டிலிருந்து தாமஸ் வீதி வீட்டுக்கு வந்தோம்: மஹாவித்வான் ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் தாளத்தில் பெயர் போனவர். அவர்களின் தரிசனம் எனது அறிய பாக்யமாகும். சிகப்பு நூலில் கோர்க்கப்பட்ட ருத்ராக்ஷம், பட்டை விபூதி, பஞ்சகச்சம் வேஷ்டி, ஜபதபம் இரண்டு வேளையும் ஸாக்ஷாத் சிவதரிசனம். சேஷய்யங்கார் இல்லத்தில் வாசம். இரண்டு கையில் இரண்டு வித தாளங்கள், கால்கள் இரண்டும் தாளம் போட **"ஸாவேரி கீர்த்தனம் "தரிதாபுலேக"** சரணத்தில் **வலசிப் பதா** என்ற இடத்திற்கும் முலநம்பிதே என்ற இடத்திற்கும் ஸ்வரம் பாடுவார். பிறகு "பரிதான மிஞ்சிதே" என்ற பிலஹரி கீர்த்தனத்திற்கு **ரொக்கமிஞ்சுடகு** என்ற இதிலும் இரண்டு இடங்களுக்கு ஸ்வரம் பாடுவது ஏக அமர்க்களமாகவும், சண்டை போலும் தோன்றும், அவ்வளவு சாமர்த்யமாகவும் பாடுவார். அவருக்கு அவரே ஈடு.

அவருக்கு சிஷ்யன் இருந்தாலும் என்னைக் கூப்பிட்டு அம்மா குழந்தை! இங்கு வா. மணை எடுத்துப்போடு. ஜலம் கொண்டு வா. தாத்தாவுக்கு செய்தால் நல்லது, விசேஷ ஞானம் அடைவாய் என்று



வாழ்த்துவார். நானும் ஸரளி ஆரம்ப பாடம் இல்லாமலே வீட்டில் வந்து கற்றுக் கொள்ளும் மாணாக்கர்கள் பாடக்கேட்டு இரண்டொரு வர்ணம் பாட (முனைக) ஆரம்பித்தேன். ஆனால் தாத்தா பாடிய பிலஹரி, ஸாவேரி ராக ஸ்வரங்கள் பசுமரத்தாணியாய்ப் பதிந்துவிட்டது. நான் என்ன பாடுகிறேன் என்பதே எனக்குத் தெரியாது. ஆனால் தாத்தா நான் ஜலதரங்க கிண்ணத்தில் சாப்பிடும் பலன்தான் எனக்கு ஏதோ ஞானம் என்பார். ஓரளவு முதியவர்கள் வீட்டில் இருந்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு சிறந்த பக்தியுடன் விருந்தோம்பல் செய்வோம். மரியாதை செலுத்தி, உபசரித்து, அவர்கள் ஆசியைப் பெற்ற அருமை சந்தர்ப்பத்தை நான் என் பாக்கியமாகவே கருதுகிறேன்.

## காரைக்குடி சகோதரர்களான சுப்பராமய்யர் சாம்பசிவ அய்யர்

காரைக்குடி சகோதரர்கள் என்று சொல்லப்படும் வீணை சூரர்கள் ஸ்ரீ அய்யன் என்று செல்லமாக அழைக்கப்படும் ஸ்ரீ சுப்பராமய்யர், ஸ்ரீசாம்பசிவ அய்யர் இருவரும். கோயமுத்தூர் கச்சேரிக்கு வந்துவிட்டு என் தந்தை சேஷய்யங்கார் வீட்டிற்கு விஜயம் செய்தார்கள். அப்போது எனக்கு எட்டு வயதிருக்கும். நான் கையில் பெரிய செம்பு-குடையுடன் பால் வாங்கி வர அனுப்பப்பட்டேன். பகல் மூன்று மணியிருக்கும். நல்ல வெயிலில் பாலை வாங்கிக் கொண்டு வாசல்வரை வந்து படி தவறி பாலைக் கொட்டிவிட்டு பெரிய ராகத்துடன் அழ ஆரம்பித்தேன். காலில் நல்ல அடி சத்தத்தைக் கேட்டு

யாவரும் ஓடிவந்து என்னை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

ஸ்ரீசாம்பசிவ அய்யர் "ஸ்ருதி சுத்தமாக அழறயே. உனக்கு பாடத்தெரியுமா?" என்று கேட்டு, என்னை வேறு வழிக்குத் திருப்பினார். பிறகு என் தந்தை அவன் ஸாவேரி வர்ணம் பாடுவனே கேளுங்கோ அண்ணா! என்று சொல்ல நான் களகுஷியுடன் தாளம் போட்டுக் கொண்டு ஸாவேரி வர்ணம் பாடினேன். சரணம் ஸ்வரம் வந்தவுடன் அதைப் பாடாமல் ஸாவேரி கீர்த்தனம் **தரிதாபுலேகாவின்** சரணத்தைப் பாடி **வலசிப்பதா** என்று பாடி இரண்டு இடங்களிலும் திருவையாறு தாத்தா பாடியதைப் போல ஸ்வரமும் பாடினேன். அதாவது **பா தபம** வலசிப் பதா நிதம பதா ஸரிம முல நம்மிதே என்று பாடவே என் தமக்கையார் உள் நின்று கண் ஜாடை, கை ஜாடை காட்டி, தொடையில் தாளம் போடச் சொல்லியும், ஏனோ கூச்சப்பட்டுக் கொண்டு செய்யவில்லை.

"பலே பலே! குட்டி படு கட்டி. சேஷண்ணா, குழந்தைக்கு சாஸ்த்ரோக்தமாக பாடம் சொல்லுங்கோ" என்று என் தந்தைக்கு ஆர்டர் போட்டார். என் தந்தையும் எனக்கு நேரம் இல்லை. கேள்வியிலேயே அவள் பாடட்டும், அவன் ஸரளி ஜண்டை வரிசை, கீதங்கள் சொல்லிக்க மாட்டாளாம். சுப்பராயன் சொல்லிக் கொடுப்பான் என்று சொன்னார். அவர்கள் இதைக் கேட்டு குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். நான் அவர்களிடம் ஜலதரங்க கிண்ணங்களை அடுக்காய் கட்டையுடன் எடுத்துக் காண்பித்து, "வெங்குட்டு தாத்தா சொல்லியிருக்கிறார்.



திருவையாறு தாத்தா சொல்லியிருக்கிறார். நான் நல்ல ஞானமுள்ளவனாக இருப்பேனாம் இந்தக் கிண்ணத்தில் சாப்பிடுவதால், நாமக்கல் தாத்தா ஸபல சொல்லிக் கொடுத்தார். இப்பொழுது நீங்கள் எல்லாம் பாடுகிறீர்களே அவையெல்லாம் நான் எனக்கு வேண்டும்" என்ற என் துணிச்சலான பேச்சைக் கேட்டு பேஷ் பேஷ்! அண்ணா, குழந்தையை இஷ்டம் போல விட்டுவிடுங்கள் என்றார்.

அவர்கள் இருவரும் என் தந்தையும் சேர்ந்து கௌளிபந்து ராகத்தில் **தொதீயகராதா** மற்றும் விஜய ஸ்ரீயில் **வரநாரத** ஆகிய கீர்த்தனங்களுக்கு பிரமாதமாக ஸ்வரம் பாட நான் ஆடாமல் அசங்காமல் ஸ்வாரஸ்யமாக ரஸித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டேன். முதல் நாள் மாலை அவர்கள் கச்சேரி ஒரு சபாவில் நடந்தது. அதற்குப் போய் நன்றாகத் தூங்கி விட்டு வந்தேன்.

பிற்காலத்தில் பெரியவர் காலமாகிவிட்டார். சுப்பராயன் சொல்லிக் கொடுப்பான் என்று என் தந்தை குறிப்பிட்ட சிஷ்யன் ப்ரபல காலக்ஷேபம் செய்த லக்ஷ்மணாச்சார் என்பவரின் மருமான் என்பது என் நினைவு. அவனுக்கு என் தந்தை காம்போதி ராகத்தில் **மாஜானகி** கீர்த்தனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அதுதான் எனக்கு வேண்டுமென்று அடம் பிடிப்பேன். அவனும் சொல்லிக் கொடுப்பான். அவனுக்கு நல்ல வசதியான சாரீரம். அத்துடன் நல்ல அழகன். கட்டுக் குடுமி. நெற்றியில் கன்னட சின்னமான பொட்டும், சிறிய கீற்றும் என் பிஞ்சு உள்ளத்தில் பதிந்தவை.

1941ல் காரைக்குடி சென்றபொழுது காரைக்குடி சாம்பசிவ அய்யர் இல்லத்திற்கு எனது குழந்தைகள் மூவருடனும் சென்றேன். அவர் என்னை அன்புடன் வரவேற்று, "உன்னை சின்ன குட்டியாய் பார்த்தேன். அந்த நினைவு என் மனதைவிட்டு அகலவேயில்லை. உன் துணிவான பேச்சும் நீ பாடிய ஸ்வரமும் என் மனதில் பலவருஷங்கள் ஆனபோதிலும் மறக்க முடியாத தொன்று. நீ என்னடாவென்றால் குழந்தையில் இருந்தமாதிரி ஒரு குட்டியுடன் வந்திருக்கிறாய்" என்றார். நான் ஒரு குட்டி இல்லை மூன்று குட்டிகளுடன் என்றேன். உடன், அதுகள் பிள்ளைக் குழந்தைகள் என்றுன்னா நினைத்தேன் என்றார். நான் எனது இரட்டைப்பெண்கள் பத்மினி, சுமதிக்கு பைஜாமா உடுத்தி தலையையும் சௌகர்யத்திற்காக கிராப் செய்து வைத்து இருந்தேன். அவர்களுக்கு எட்டு வயதுவரை என் கணவர் அப்படி செய்து வந்தார். ஸ்ரீ சாம்பசிவய்யரை அடிக்கடி பார்க்கும் பாக்யமும் பிறகு கிடைத்தது. அவர் என் தஞ்சை இல்லத்தில் வீணை வாசித்து என் பாட்டையும் கேட்டு ஆசீர்வதித்தது என் மனதைவிட்டு அகலாது.

## சேலம் துரைஸ்வாமி அய்யங்கார்

இவர் பூச்சி ஸ்ரீனிவாஸய்யங்காரின் சிஷ்யர். அரியக்குடி ராமானுஜய்யங்கார், காரைக்குடி ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஆகிய இருவரையும் விட வயதிலும், வித்வத்திலும் முதியவர். நாங்கள் கோயமுத்தூரில் இருந்த காலத்தில் எங்கள் இல்லத்திற்கு இவர் விஜயம் செய்திருக்கிறார். பழைய காலத்தில் நான் பார்த்த வித்வான்களில் அநேகம்



பெயர்கள் பஞ்ச கச்சம்தான் கட்டிக் கொண்டிருந்தார்கள். துரைஸ்வாமி அய்யங்காரும் அதே தோற்றம்தான். நெற்றியில் திருமண். நல்ல களையான முகம். கம்மலுடன் கூடிய கன சாரீரம். இவரும் என் தந்தையும் ஆனந்த பைரவி ராகத்தில் "நீமதி ஸல்லக" கீர்த்தனம் பாடியதை மறக்கவே முடியாது. இவருக்கு நல்ல உதவுபடியான ப்ருகா சாரீரம், மிகவும் வேடிக்கையாகப் பேசுவார். தான் கோயிலில் மூலவர் என்றும் ராமாஞ்சம் (அரியக்குடியை) உத்ஸவர் என்றும் அவர் சொன்னது என் காதில் அப்படியே உள்ளது. நீமதிஸல்லக கீர்த்தனத்தின் சரணத்தில் "தல்லி தன்றி குரு தெய்வமு நீவனி"யில் நிரவல், ஸ்வரம் அவர் பாடிய மாதிரி நான் இதுவரை யாரிடமும் கேட்டது கிடையாது. ஒன்றும் தெரியாத சின்ன வயதில் மனதில் படும்படியாகவும், நினைவு கொள்ளும்படியாகவும் பாடினார்.

கோயமுத்தூரில் வெள்ளிக்கிழமை தவறாமல் எங்கள் வீட்டில் என் தந்தை பலருடன் இரவில் (கச்சேரி) நடத்துவார் ஒரு பஜனை மாதிரி என்றும் அதைச் சொல்லலாம். பணம் சம்பாதிக்கலாம். ஆனால் சுலபமாகக் கிடைக்கப் பெறாதவை நான் அனுபவித்துள்ள மகத்தான ஸங்கீத ஸாம்ராஜ்யம் எனக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத பேரின்ப மாகும்.

## ஸ்ரீசெம்மங்குடி நாராயணஸ்வாமி அய்யர் (பிடில்)

நாங்கள் 355 தங்கசாலைத் தெருவில் வசிக்கும் போது வந்து தங்கும் வித்வான்களில் பிடில் செம்மங்குடி திரு. நாராயணஸ்வாமி அய்யர்

அவர்களும் ஒருவர். இவர் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் மருமகன். மாப்பிள்ளையும் கூட. இவர் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யரின் பெரிய தாயாரின் பிள்ளை. ஸங்கீத பரம்பரை. அவர் ஞானத்தையோ, வாசிப்பையோ என்னால் சொல்லி முடியாது. அஸ்ஹ்ரஸாதகம் செய்வார். எங்கள் வீட்டில் தான் ஜாகை. குழந்தை உள்ளம் படைத்தவர். சுந்தரி நீ பாடு நான் வாசிக்கிறேன் என்பார். சாப்பிடும் உள்ளுக்கு பிடிலைத் தூக்கி வந்து விடுவார். கீர்த்தனத்தில் நல்ல பிடியாக இரண்டு வந்தால் போதும். உடன் தான் வாசிப்பதையும் நிறுத்திவிட்டு வாயால் பாடி மகிழ்வார். வாசிக்கவும் வாசிப்பார். பசி, தாகமே கிடையாது. நானும் பாடுவேன். பாதி இரவில் அவருக்கு வாசிப்பு நினைவு வந்துவிட்டால் தன் பிடிலை எடுத்துக் கொண்டு வாசல் வராண்டாவில் கம்பி போட்டிருக்கும். பக்கத்து ரூமில் ஜவுளிக்கடை அடக்கமாக இருக்கும். அங்கு போய் வாசிக்க ஆரம்பித்துவிடுவார்.

இந்த 355ல் ஸ்ரீமதி தனம்மாள் அவர்களை வீணையுடன் ரிக்ஷாவில் கூட்டிவந்து வாசிக்க வைப்பார். தனம்மாள் அவர்கள் வெள்ளி தவறாமல் ஜலதரங்கம் ரமணைய செட்டியார் அவர்கள் வீட்டில் வாசிப்பார். சில சமயம் எங்கள் வீட்டிலும் வந்து வாசிப்பது வழக்கம். அப்படி ஒருநாள் ஸ்ரீமதி தனம்மாவின் வாசிப்பு நடந்து கொண்டிருக்கும்போது. சரியான ரஸிகர்கள் கூட்டம், அன்று அம்மா வாசித்த ராகமான ஸௌராஷ்டிரம், ஆஹிரி என்னை அறியாமல் உள்ளத்தை எனக்கு மட்டும் அல்லாமல் செம்மங்குடி நாராயண ஸ்வாமி ஐயரையும்



தொட்டது. அவர் கண்களில் ஆனந்தம் சொறிய வாசலிலுள்ள ஜவுளிக் கடைக்குச் சென்று அழகான அரக்கு மேகவர்ண புடவையை வாங்கி வந்து அம்மாளுக்குப் போர்த்தி கைகூப்பி வணங்கி கண்ணீர் சொறிந்தார். அந்தக் காட்சி என் மனக்கண்ணைவிட்டு இன்றும் நீங்கவில்லை. அவர்கள் யாவரும் மறைந்து விட்டார்கள்.

## ஸ்ரீமதி வீணை தனம்மாள்

ஸ்ரீமதி தனம்மாள் அவர்களுக்கு அப்போது கண்பார்வை கொஞ்சம் மங்கல். கண் சிகிச்சைக்காக Dr. ஸீதாபதி அய்யர் வீட்டில் பல நாட்கள் தங்கினார். அவர் எங்கு எப்போது வந்தாலும் வெற்றிலை துப்புவதற்கு ஒரு பாத்திரமும் உண்டு (எடுத்துச் செல்வார்) வெற்றிலைப் பெட்டியுடன்தான் வருவார். அப்படி அவர் எங்கள் வீட்டிற்கு வரும் சமயத்தில் அவர் துப்பிய எச்சில் தாம்பூலத்தை நான் தான் சுத்தம் செய்து அவரிடம் சேர்ப்பேன். அவர் வாயில் வெற்றிலையுடன் என்னை முழித்துப் பார்த்து சிரிப்பார். அவர் துப்பும் எச்சில் ஒரே வாசனையாக இருக்கும். அவர்கள் பக்கம் போனால் (ஸ்வாதும்) அத்தர் வாசனை தான் வரும். அவர் வாசித்த வாசிப்பும், வாசனையும் என் மனதை விட்டு நீங்காதவை.

Mrs. சீதாபதி அய்யர் அவர்கள் தனம்மாளின் சிஷ்யை. ஒவ்வொரு சமயம் அவர்கள் வீட்டில் டைகர் வரதாச்சாரி அவர்களும் வந்து தங்கி Mrs. சீதாபதிக்கும், ஸாவித்ரி ராஜன் அவர்களுக்கும்

ஷிஷ்யார்த்தம் நடத்துவது வழக்கம். வழக்கமாய் அவர்களும் பக்தி சிரத்தையுடன் அவர்களுக்குப் பணிவிடை செய்வதுடன், அவர்களைப் பார்க்க வருபவர்களுக்கும், முக்கியமாயுள்ளவர்களுக்கும் உபசரிப்பு நடக்கும். அப்படி உள்ள இடத்தில் எனக்கு ஓர் இடம். தனம்மாளை ஸாயங்காலத்தில் பார்க்க நானும் போவது வழக்கம். அந்த சமயத்தில் தான் பரூர் சுந்தரமய்யரும், முசிறி சுப்ரமண்ய ஐயரும் "ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தே" என்ற தீக்ஷிதர் சங்கராபரண கீர்த்தனத்தைப் பாடம் செய்துகொண்டிருந்தார்கள். நான் நுழைந்ததும் சரணத்தை நிறுத்திவிட்டு, "ஸ்ரீ சேஷய்யங்கார் மச்சினி. வளர்ப்புப் பெண், பாடுவாள். ராமானுஜய்யங்கார் மாதிரியே இருக்கும். பாடச் சொல்கிறேன்" என்று என்னை உள்ளே போகாமல் உட்கார்ந்து பாடச் சொன்னார் தனம்மாள். நானும் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுப் பாடினேன். **தினமணிவம்ச, கார்த்திகேய, எவரிமாட, வைஷ்ணவ ஜனதோ,** இப்படியாக நான்கு பாட்டுக்களை அடுத்தடுத்து பாடச்சொன்ன பிறகும் என்னை முடிக்கச் சொல்லவில்லை. அரியக்குடி, எங்கள் வீட்டில் தங்கின நாட்களில் தனம்மாளைக் கூட்டிவந்து ஜாவளி, பதம் கீர்த்தனைகள் அம்பநன்னு ப்ரோவ தோடி ராகத்தில் பாடம் செய்யக் கேட்டுள்ளேன்.

## முகர்ஸிங் சீதாராமய்யர்

இவரையும் நான் தாத்தா என்றே அழைப்பேன். எங்கள் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர். இவர் சில ராஜாக்கள் ஸன்னிதானங்கள் பற்றியும் சிறப்பாக விமர்சித்துள்ளார். அதில் முக்கியமானவர்கள் பாஸ்கர சேதுபதி, திருவாடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் இவர்களைப்பற்றி மிக ரஸமான செய்திகளையும் அவர்கள் பெரிய வள்ளலாக இருந்ததையும் பற்றி எனக்கு நிறைய சொல்லியிருக்கிறார். பாட்டைப் பற்றியும், காலக்ஷேபங்களைப்பற்றியும், உபன்யாசங்கள் பற்றியும் ஸ்வாரஸ்யமாகச் சொல்லுவார். பின்னால் அவர் சொன்னவைகள் யாவும் துணுக்குகளாகவும் சிறப்பாக பேப்பர்களிலும், புத்தகங்களிலும் படித்து தாத்தாவைப்பற்றி பெருமைப் பட்டுள்ளேன். மஹா வித்வான்கள் பலர் எனக்கு நினைவு தெரிந்து மிருதங்கம், வயலின், கடம், முகர்ஸிங் கஞ்சிரா, காலக்ஷேப வித்வான்கள் காலமானது 1930லிருந்து நூற்றுக்கணக்கானவர்கள்.



## என் தந்தை நாமக்கல் சேஷய்யங்கார்

மிகுந்த தயாள குணமுடையவர். வாழ்க்கையில் பொய், திருடு இன்றி, நேர்மையுடன் இருப்பது, நல்ல நடத்தையுள்ளவர்களின் நட்பு, நல்ல பெயர் எடுப்பது இவைகள் தான் நீடிக்கும். இவைகளை கடைப் பிடித்தால் ஸ்ரீராமபிரான் அனுக்ரஹம் பூர்ணமாக இருக்கும் என்று அடிக்கடி சொல்வார். அவர் ஒரு கர்மயோகி. ஆசாரசீலர், ஸந்தியாவந்தனம், மாத்யான்னிகம் தவறமாட்டார். மத்யானம் 2 மணிக்கு வெளியிலிருந்து திரும்பினாலும் ராமபூஜை செய்யாமல் உணவு அருந்தமாட்டார். ஆகாரத்திற்குப் பிறகு கொஞ்சம் படுப்பார். அவரைப் பார்க்க யாராகிலும் வந்துவிட்டால் உடன் படுக்கையை சுற்றி

வைத்துவிட்டு, பேசவோ, பாடம் சொல்லிக் கொடுக்கவோ ஆரம்பித்து விடுவார்.

உதாரணமாக, ஸ்ரீ அய்யாவையர் மிருந்த கஷ்டத்திற்குப்பின் மனைவியை இழந்து ஒரு பெண் குழந்தையுடன் வந்தவரை தன் வீட்டில் சௌகரியமாக நடத்தி அவருக்குப் பல இடங்களில் சங்கீதம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தார். MLV பிறப்பதற்கு முன் அவள் தாய் லதாங்கிக்கும் பாடம் சொல்ல ஏற்பாடு செய்தார். என் தகப்பனாரை அறியாதவர்கள் வெகு சிலரே. அக்காலத்தில் எங்கள் வீடு சகல வித்வான்களும் வந்து கூடுமிடமாக இருந்தது. வசதியில்லாதவர்களை தன் வீட்டில் வைத்து பராமரித்து அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களை செய்து கொடுத்தும் மகாவித்வான்களை கௌரவித்தும் அனுப்புவார். அதற்குச் சான்று ஜலதரங்கம் ரமணைய செட்டி நடத்திய ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை அடுத்து, அக்காலத்தில் 10 நாள் ஸ்ரீராமநவமி உத்ஸவ கச்சேரிகளை இவர் நடத்தினார். அதைப் பற்றி பேசாதவர்களே கிடையாது எனலாம். பெரிய மஹாவித்வான்களின் பாட்டையும், வாசிப்பு களையும் கேட்கக் கொடுத்து வைத்த என்னை நான் மிகவும் பாக்யவதியாகவே நினைத்து வாழ்நாளைச் செலுத்த எண்ணுகிறேன்.

அவர் சிஷ்யர்களில் மிகவும் பிரபலமானவர்கள். சித்தூர் V. நாகையா, மற்றொருவர் கங்கன் என்ற படத்தை எடுத்த Director T.G. ராகவாச்சாரி (Advocate). இவர் பேபிகமலாவை வைத்து படம் எடுத்தார். கமலா



மிக நன்றாக தாயே யசோதா என்ற பதத்தை ஆடியுள்ளார். அவர் தன் மகள் ஜயலக்ஷ்மியுடன் பாடம் சொல்லிக் கொண்டார். கிரனூர் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, வஸுந்தரா (வைஜயந்திமாலாவின் தாயார்) K.B. சுந்தராம்பாள், பாலையூர் சகோதரர்கள்- ரமணி, கனகசபாபதி, குன்னக்குடி வெங்கடராமய்யர். துறையூர் ராஜகோபால சர்மா. V.V. சடகோபன், இந்துடன் வெளியில் பெரிய வேலை பார்க்கும் பெரிய பிரமுகர்கள், ஸ்வர்ணஸரஸ்வதி, V. ரங்கநாயகி, ரஞ்சன், கமலா முதலானவர்கள். அரியக்குடி எனக்குத் தெரிந்து அநேக கீர்த்தனங்கள் என் தந்தை சேஷய்யங்காரிடம் பாடம் செய்துள்ளார். என் தந்தை அவர் சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லும் விதமே தனி ரகம். தெலுங்கு தெரிந்தவர். உணர்ச்சி பொங்க அர்த்தங்களை விவரித்து விளக்கி ராகத்திற்கு ஏற்பட்ட பாவத்தோடு சொல்லிக் கொடுப்பார். ஞானம் இல்லாதவர்கள் கூட பாடப் பிரியப்படும்படியாக இருக்கும். அவரை சாதாரண வாத்தியாராகக் கருதாமல் வித்வான்கள் அனைவரும் வாத்தியார்களுக் கெல்லாம் வாத்தியார் (Teacher of Teachers) என்பார்கள். அவர் காலமான பின்பு அவரை அநேகம் பேர்கள் இப்படியே விளக்கி ஹிந்து மற்றும் பல பத்திரிகை களிலும் எழுதியிருந்தார்கள். சாதாரண சிஷ்யர்களைப் போலவே அரியக்குடியும் அவரிடம் உட்கார்ந்து பாடம் கற்றதை நான் நேரில் பார்த்துள்ளேன்.

என் சிறிய வயதில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி சண்டை பிடிப்பேன். ஆனால் அவர்

உனக்கு ஏன் இதெல்லாம். மஹாவித்வான்கள் ஆசியும், நல்ல கேள்வியும் உனக்குப் பரிபூர்ணமாக உள்ளது. உன்னுடைய கேள்வி ஞானமே போதும் என்று சொல்லுவார்கள். அது உன்னைவிட்டு அகலாது என்பார். என் பெண் சியாமளாவை, அவள் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே, எல்லா விடுமுறைகளுக்கும் சென்னைக்கு அனுப்பி, எனது தகப்பனாரிடம் சங்கீத பாடம் கற்க வைத்தேன். அவள் அவரிடம் நிறைய தியாகராஜர், தீக்ஷிதர் உருப்படிகளும், பழைய பதங்களும் கற்றுக் கொண்டாள்.

என் வளர்ப்புத் தந்தை 1955ல் ஜூலை மாதம் ஒரு மாலை ஸந்தியாவந்தனம், அதன்பின் காயத்ரி, ராமஜபம் இவைகளை செய்துவிட்டு என் தமக்கையார் கோதுமைக் கஞ்சி எடுத்துவர உள்ளே சென்று வந்தபோது கண், கை மூடியவண்ணம் ஜபம் செய்து கொண்டே தலை சாய்த்துவிட்டார். அன்று மாலை கூட நடந்து சென்று பலருடனும் பேசினார். அவரைப் புனித ஆத்மா என்றே சொல்ல வேண்டும்.

என் தமக்கையார் 80 வயதுக்கும் மேலாகவும், திடகாத்திரமாக, தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டு திருவாய் மொழி, பாசுரங்களை முனகிய படியே இருப்பார். ப்ரவசனம் கதாகாலக்ஷேபம் கேட்பார். நல்ல அறிவாளி, சிறந்த ஞானி, இராமாயணம், மஹாபாரதம் இவைகளைப்பற்றி நிறையத் தெரிந்தவர். இவைகளைப் பற்றி பேச ஆரம்பித்தால் களைகுஷியுடன் எல்லாவற்றையும் நினைவுடன் எல்லாப் பகுதிகளையும் அழகாக



எடுத்துச் சொல்வார். தனக்குக் குழந்தைகள் இல்லாத குறையை நிவர்த்திக்க மற்றோர் குழந்தைகளை எடுத்து வளர்த்து அன்பும் ஆதரவும் காட்டி, தர்மபத்னியாக வாழ்ந்தார். அவர் என்னை வளர்த்து ஆளாக்கியதால் எனக்கு இவைகளில் ஈடுபாடுண்டு. இம்மாதிரி நூல்களே மனதிற்கு நிறைவும். சாந்தமும் பொறுமையும் கொடுக்கக்கூடியவைகள். நானும் தினம் கீதை, லலிதா, ஸஹஸ்ரநாம பாராயணம் ரகுவீரகத்ய பாராயணம் செய்வேன். ஒரு நாள் தவறிவிட்டாலும் மனது அமைதியாக இருக்காது.

## என் குருநாதர் அரியக்குடி ராமானுஜய்யங்கார்

ஒரு நாள், காலையில் எங்கள் வீட்டில் ஓரே பரபரப்பு 'ராமாஞ்சன் வரான்', என்று என் தந்தையின் ஆரவாரம். அன்று மாலை (அரியக்குடிக்கு) கச்சேரி. காலை 8 மணியளவில் சிஷ்யன் சத்யமூர்த்தி பெரிய பெட்டி. படுக்கை தம்பூராஸஹிதம் அரியக்குடி வந்து சேர்ந்தார். எங்கள் பள்ளியப்பன் தெரு வீடு பெரியது. ஆனால் என் தந்தை சிறிய போர்ஷன்தான் வைத்துக் கொண்டிருந்தார். அதன் அமைப்பு இவ்வளவுதான், நுழைந்ததும் ஒரு ரூம், வராண்டா, சமையல் ரூம், குளியலறை முற்றத்தை ஒட்டிய சிறு ரூம். அரியக்குடி வந்து சேர்வதற்கு முன்பே அவரைத் தேடிக்கொண்டு சபாக்காரர்கள் வந்துவிட்டனர். சங்கீதப் பிரியர்கள் கூடத்தில் நிறைந்திருந்தனர். வந்ததும் காலைக்கடனை முடித்துக்கொண்டு வெளியில் போய்விட்டார். பிற்பகலில் வந்து குளித்து சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு கச்சேரிக்குப் போய்விட்டார்.

அன்று கச்சேரியில் "ஜேசினதெல்ல" தோடி ராகத்தில் பாடியது என் மனதைக் கவர்ந்ததுடன் அதுதான் தோடி என்ற அசையாத நினைவும் ஏற்பட்டுவிட்டது. பலப்ருகாவுடன் கூடிய சங்கதிகள் மத்திமகால கீர்த்தனம் கேட்டுவிட்டு வந்து அன்று என் தூக்கத்திலும் தோடி ராகமும் அந்த கீர்த்தனமும் தான். நான் மறுதினம் காலையில் முனக ஆரம்பித்து விட்டேன். அடுக்கு சங்கதிகளை, அரியக்குடி மாமா கவனித்து விட்டார். இந்தக்குட்டிக்கு இவ்வளவு ஞானம் இருக்கே சேஷண்ணா என்றார். அரியக்குடிக்கு வயதில் பெரியவர் என் தந்தை. ஆதலால் சேஷண்ணா என்று தான் கூப்பிடுவார். எங்கே பாடம்மா அந்த சங்கதியை என்றதும் நாணிக் கோணிக் கொண்டு பாடினேன். உடனே தன் சிஷ்யனைப் பார்த்து "தோசிப்பயலே, பாருடா. இந்தக்குட்டி என்ன லாகவமாக சங்கதியைப் பிடித்து விட்டாள்" என்று இடித்தார். இவர் சிஷ்யன் அரியக்குடியின் தமையனார் மாப்பிள்ளை. மறுதினம் மாமா எனக்குப் பாடம் சொல்லித்தரேளா என்று கேட்டேன் பேஷாய் உட்கார் என்று எனக்கு பிடித்தமான தோடியில் "எந்துகு தயராதுரா" என்ற கீர்த்தனத்தை ஆரம்பித்தார். மறுதினமே பாடம் செய்துவிட்டேன். அத்துடன் "ஜேசினதெல்ல" என்ற தோடிராக கீர்த்தனத்தையும் சிஷ்யனுக்கு சொல்லிக் கொடுக்கும் பொழுது பாடம் செய்து அவரிடமும், என் தந்தையிடமும் பாடி பாலிஷ் செய்து கொண்டு விட்டேன்.

நான் மஹாமேதை நாமக்கல் சேஷய்யங்காரால் வளர்க்கப்பட்டவளானாலும் கரடுமுரடு இல்லாமல்



ரம்யமாக காது நிறைந்த என் குருநாதர் அரியக்குடியின் ஸங்கீதம் என் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிந்துவிட்டது. அய்யங்காரும் வரும் போதெல்லாம் பிரியமாக உட்காரவைத்து ராமநாதபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார் கிருதிகளை பாடம் சொல்லுவார். அவர் தன் சிஷ்யர்களுக்கு பாடம் சொல்வது அபூர்வம். சிஷ்யனின் முன்னேற்றத்தில் அவர் அவ்வளவு சந்தோஷப்பட்டதாகத் தெரிய வில்லை. சிஷ்யர்களின் தேவைகளைப்பற்றி சிறிதும் கவனிக்கமாட்டார். ஆனால் அரியக்குடி எங்கள் வீட்டில் தங்கியிருக்கும் போது மாமாவுக்கு தினசரி கைங்கர்யம் நான் தான் செய்வேன். கச்சேரியில் புதிதாக ஏதாவது பாடிக் கேட்டால் இந்த கீர்த்தனம் வேண்டுமென்று சொல்லி அடம் பிடித்துக் கற்றுக் கொள்வேன். அத்துடன் ஒரே நாளில் சரணம் உள்பட வேண்டுமென்று அழுவேன். என்னை சமாதானப் படுத்தி மறுதினமே அதை முடித்துவிடுவார். நான் அதையே முனகுவதையும் ஸதா அதே ஞாபகமாக இருப்பதையும் பார்த்து மெச்சி என்னை 'ஏகஸந்தக்ராஹி' என்பார். 10 வயதில் தவறிப்போன தன் பெண் ருக்மிணி ஞாபகமாக இருப்பதாக என்னைத் தன் பெண்ணாகவே பாவித்து நடத்தினார். புத்திமதிகள் போதித்தார். என்னை யாரும் தப்பாக ஒரு விதத்திலும் கூறப் பொறுக்கமாட்டார். அக்காலத்தில் அவருக்கு ஓய்வு என்பதே கிடையாது. காலை உணவுக்குப்பின் வெளியில் சென்றால் இரவு சாப்பாடும் வெளியில்தான். மறுதினம் காலைதான் வருவார்.

அக்காலத்தில் பன்னிபாய், அபரஞ்சி, மதுராந்தகம் கண்ணம்மா, ஸரஸ்வதிபாய் வீட்டிற்குச் சென்று அவர்கள் விரும்புவதை பாடஞ் சொல்லிக் கொடுத்துவிட்டு அவர்களால் அளிக்கப்பட்ட பரிசு களையும் வாங்கிக்கொண்டு வருவார். அவர் தன் கச்சேரியில் புதிதாக ஏதாகிலும் பாடம்செய்து பாடிப் பிரபலப்படுத்துவார். அவர் அப்படி பிரபலப் படுத்தியது தான் மாங்காய்ப்பாலுண்டு, ஸத்யாக்ரஹத்தை, ராட்டினமே, பாரதமாதா, வைஷ்ணவ ஜனதோ, வள்ளியின் கல்யாணமதை, திருச்செந்தூரான், சிவகுமாரன், பாதிமதிநதி இம்மாதிரியான துக்கடா பாட்டுக்கள்.

அய்யங்காருக்கு தொண்டைக்கட்டல் என்றால் அன்று கச்சேரிக்கு மேல் காந்தாரம் கூடப் போகாமல் தோடியில் நின்னுவினாஸுகமுகான, எதுகுலகாம் போதிராகம், சாந்தமுலேகா கீர்த்தனம் இம்மாதிரி ராக, கீர்த்தனங்களைப் பாடி கச்சேரியை கனஜோராராக முடித்துவிடுவார். அத்துடன் ஜனங்களால் புகழப்பட்டு கரகோஷத்திற்குப் பாத்திரமாவார். அவருடைய கம்மல் சாரீரம் ஜீவன் மிகுந்தது. அதுபோல் யாருக்குமே சாரீரம் அமையவில்லை. அந்தக் காலத்தில் சங்கீதக் கச்சேரிக்கு அரியக்குடி, நாடகத்திற்கு கிட்டப்பா இவர்கள் இருவரும் சிகரமாக விளங்கினர்.

எனக்கும் ஓர் அளவு மாமா குடும்பத்தில் எல்லோரும் தெரிந்தவர்களே. மாமாவின் மைத்துனர் முத்துப்பட்டினம் ஸ்ரீனிவாஸய்யங்கார் என்று அழைப்பதுண்டு. இவரும் பூச்சி ஸ்ரீனிவாஸய்யங்காரின் சிஷ்யன். இவருடைய பிள்ளை கோவிந்தனுக்கு தன்



பெண் லக்ஷ்மியைக் கல்யாணம் செய்து கொடுத்தார். எனக்குத் தெரிந்து ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் மாமாவுக்குப் பிறந்து இறந்துவிட்டன. ஆண் குழந்தைகள் கிடையாது. இரண்டு பெண்கள்தான் (லக்ஷ்மி, ஜானகி) மிகுந்தனர். அவர்களுக்குக் குழந்தைகள் உள்ளனர். அவர்களில் ஒருவன் (ஜானகியின் பிள்ளை)தான் மாமாவின் கடைசி ஸம்ஸ்காரத்தைச் செய்தான்.

நான் சம்பாதிக்கத் தொடங்கியதிலிருந்து என் குருவின் மனைவிக்கு எட்டுக்கல் வைரத்தில் முக்கால் காரட் கொண்ட வைரபேசரி செய்து கொடுத்தேன். மாமாவுக்கு 4 பவுனில் பொடி டப்பி, வெள்ளியில் வெற்றிலைப்பெட்டி, பாக்கு, சுண்ணாம்பு டப்பியும் இதைத் தவிர என்னிடமிருந்த மரக்கண்ணாடி பீரோவை அவரே எடுத்துக் கொண்டு விட்டார். நானும் சந்தோஷமாக அவர் எதைக் கேட்டாலும் தடங்கல் சொல்லாமல் கொடுத்துவிடுவேன். அவருக்கும் அது மிகவும் சந்தோஷத்தை அளித்தது. வெளியில் எல்லோரிடமும், குழந்தை அவள் ட்யூஷன் சொல்லி சம்பாதித்ததை எவ்வளவு சந்தோஷமாக எனக்கு கொடுக்கிறாள் என்று சொல்லி பெருமைப் படுவார். நானும் விஜயதசமிக்கு ஒரு பவுன் கொடுப்பேன் (அப்போது அதன் விலை ரூ.13.50) அந்தக் கால வாழ்க்கை மிகவும் ஸ்வாரஸ்யமாக இருந்தது. அதேபோல அக்காலத்தில் கேட்ட கச்சேரிகளையும் நினைத்து பூரிப்படைவேன். அக்காலத்து விலைவாசியையும் நினைத்து (ஒரு மூட்டை அரிசி ரூ.8.50) பெருமைப்பட்டுக் கொள்வேன்.

நான் அரியக்குடியைப்பற்றி எழுதுவது 1933 வரை தான். அதன் பின் நடந்தது எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஒரு சமயம் நான் நாட்டு சுப்பராய முதலி தெருவில் குடியிருந்தபோது பள்ளிபாய், மூகர்லிங் தாத்தா மூலமாக என்னிடம் வந்து நான்கு கீர்த்தனைகள் பாடம் செய்தார். இது அவர் காதுக்கு எட்டி என்னிடம் சண்டை பிடித்து நான் பாடம் சொல்லக் சொல்ல வேண்டிய இடத்தில் நீ சொல்லக் கூடாதென்றும் அவன் கொடுத்த ரூ.100ஐயும் வாங்கிக் கொண்டு போய் விட்டார்.

அரியக்குடி பணத்தில் கெட்டியானவர். காலணாக்கூட கையை விட்டு செலவழிக்கமாட்டார். பணம் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார். அவரிடம் ஒரு சிஷ்யனும் அதிக நாட்கள் தங்குவது சிரமம். வசதியுள்ள மாணாக்கள் தான் கை செலவு செய்து கொண்டு அவருடன் தங்கியிருந்து பாடம் சொல்லிக் கொள்ள வேண்டும். அதுவும் கேள்வியோடும், கச்சேரியுடனும் சரி, உட்கார்ந்து எந்த சிஷ்யனுக்கும் பாடம் கற்றுக் கொடுத்ததில்லை. அவருடைய கடைசி காலத்தில் இரண்டொரு சிஷ்யர்கள் தங்கி அவரிடம் கேட்டும், தெரிந்தும், அறிந்தும் கச்சேரி செய்தது மிகவும் ஆச்சரியமே. இவர்கள் வசதியுள்ளவர்கள், அதனால்தான் சமாளித்திருக்க வேண்டும்.

ஒரு சமயம் நானும் என் சகோதரி ஆண்டாளும் சேர்ந்து பாடல்கள் பதிவு செய்து கொடுப்பதற்கு ஸரஸ்வதி ஸ்டோர்ஸ் W. துரைஸ்வாமி ஐயங்கார் (கே.எஸ். நாராயண ஐயங்கார்) மூலமாகவும் ஏற்பாடு



ஆனபோது அதற்கு அரியக்குடி அவர்களின் அசிக்காக நான் காத்திருந்தேன். பாட்டுகளும் பொறுக்கப்பட்டு விட்டது. அவரிடம் நான் இந்த நற்செய்தியைத் தெரிவித்ததும், ரௌத்திராகாரமாகிவிட்டார். அவர் சொன்னதாவது, "நான் ரிக்கார்டு செய்ய இருக்கிறேன். மேலும் நீ கச்சேரியோ, ரிகார்டோ, செய்யக்கூடாது. கொடுக்கவும் கூடாது. அவைகள் என்னுடைய சொத்து. உனக்கு உரிமை கிடையாது" என்று சொல்லிவிட்டார். 1933-1934லில் எனக்கு முசிரி சுப்ரமண்ய ஐயர் அவர்கள் மூலமாகக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் என்னால் உபயோகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் சில வகைகளில் என்னுடைய பிடிவாதம் எனக்கு நல்வழியைக் காட்டியுள்ளது.

ஐயங்கார் கும்பகோணத்தில் தனம்மாள் என்ற ஒரு அம்மாளை அபிமானமாக வைத்திருந்து கடைசி வரை அந்த அம்மையாருடனிருந்தார். அரும்பாடு பட்டு செலவு என்பதையே அறியாமற் சேர்த்து வைத்த சொத்துக்களையும் பணத்தையும் அவருக்கே கொடுத்துவிட்டாராம். அவர் காலமான அன்றும், பிறபு 10ம் நாள் 13ம் நாள் காரியத்திற்கு தேவநாதன் தெருவில் உள்ள இவர் இல்லத்திற்கு சென்றபோது அவருடைய பெண்கள் இருவரும் அக்கா என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இதைப் பிரலாபித்தார்கள். கடைசி காலத்தில் போதுமான பணம் செலவுக்கு இல்லாமலிருந்ததாயும் கூறினார்கள். தனம்மாள் இறந்த 40ம் நாளே மாமாவும் (அரியக்குடியும்) காலமாகிவிட்டார்.

நான் ஒருமுறை எனது சிஷ்யன் ஸத்தி Mrs. R.S.K. இவர்களுடன் அவரைப் போய் பார்த்தேன். தனம்

மிகவும் படுத்த படுக்கையாக இருந்தார். அய்யங்கார் சேர்ந்தாற்போல சில நிமிடங்கள் கூட உட்கார முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். Kidney Trouble என்று சொன்னார்கள். சென்னையில் இஸபெல் நர்ஸிங் ஹோமில் படுத்திருக்கும் போது போய்ப் பார்த்தேன். பேரன்தான் கைங்கர்யம் செய்து கொண்டு இருந்தான். அவர் பெண்களுக்கு வைத்த ஆஸ்தி மயிலையில் ஒரு சிறிய வீடு சின்னப் பெண்ணுக்கும். தேவநாதன் தெருவிலுள்ள வீடு, பெரிய பெண்ணுக்கும். அவரிடம் சுயநலமும் சற்று மேலோங்கியே இருந்தது. ஸங்கீதம், வேடிக்கையான பேச்சு, தகுந்த மனிதர்களைக் காரிய நிமித்தமாக திருப்தி செய்தல் இவைகளைத்தான் இவர் ஆதியிலும் அந்தத்திலும் கடைப்பிடித்ததாகத் தெரிந்தது.

அய்யங்காரின் சங்கீதமும் என் தந்தையால் போதிக்கப்பட்ட புத்திமதிகளும், சிறிய வயதில் பெண்கள் இருக்க வேண்டிய கிரமத்தையும் போதித்தது என்னைக் காப்பாற்றி வந்தது. இப்பவும் அதில் ஒரு மனநிறைவு உள்ளது. சில புத்திமதிகள் மிதமிஞ்சியது. அவைகள் இக்காலத்திற்கு ஒவ்வாததும் கூட. ஸ்ரீஐயங்கார்வாளின் குறைபாடுகளை யாரும் பொருட்படுத்தியது கிடையாது. அவருடைய ஸங்கீதம் ஒன்றுதான் யாவருக்கும் குறிக்கோள். அவ்வளவு உயர்ந்த ரகமாக இருந்தது.